# துபாய் அதிபர், ஐக்கிய அரபு அமீரகத்தின் குடியரசு துணைத் தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோருடன் பாரத பிரதமரின் சந்திப்பு

பிப்ரவரி 14, 2024

1. பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் துபாயில் 2024 பிப்ரவரி 14 அன்று துபாய் குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் துபாய் ஆளுநர் மேதகு ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூமை சந்தித்தார்.

2. இந்த சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், விண்வெளி, கல்வி மற்றும் மக்களிடையேயான உறவுகள் உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு துறைகள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடினர். பின்னர் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் குறித்து அவர்கள் தங்கள் திருப்தியை தெரிவித்தனர். மேலும் விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தின் முக்கிய பங்கை குறிப்பாக ஒப்புக்கொண்டனர். இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதையும் அவர்கள் வரவேற்றனர்.

3. துபாயில் வசிக்கும் இந்திய சமூகத்தினருக்கு பிரதமர் மேதகு ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் அவர்கள் காட்டிய கருணைக்கு பாரத பிரதமர் மோடி அவர்கள் நன்றிகளை தெரிவித்தார். பின்னர் வர்த்தகம், சேவைகள் மற்றும் சுற்றுலாவுக்கான உலகளாவிய மையமாக துபாயின் பரிணாம வளர்ச்சியில் புலம்பெயர்ந்த இந்தியர்களின் பங்களிப்பை இரு தலைவர்களும் அங்கீகரித்தனர்.

4. இந்திய ப்ளூ-காலர் தொழிலாளர்களுக்கு மலிவு விலையில் சுகாதார வசதிகளை வழங்கும் துபாயில் உள்ள இந்திய சமூக மருத்துவமனைக்கு நிலம் வழங்கியதற்காக பிரதமர் மேதகு ஷேக் முகமது பின் ரஷீத் அவர்களுக்கு பாரத பிரதமர் மோடி அவர்கள் தனது பாராட்டுகளை தெரிவித்தார்.

5. இந்த சந்திப்பைத் தொடர்ந்து, பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், துபாய் பிரதமர் மேதகு ஷேக் முகமது பின் ரஷித் அல் மக்தூம் அவர்களிடம் விரைவில் இந்தியாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

**துபாய்**
**பிப்ரவரி 14, 2024**